26.02.2024 OS.41/2016 PW1 Name :.**நீலம்மாள்**

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. தாவா சொத்து நான் வாங்கியது ஆகும். 2 அயிட்டங்களாக சொத்துகளை வாங்கினேன். அவைகள் இரண்டும் என் பெயரில் தான் வாங்கபட்டது. அந்த சொத்து சம்மந்தமாக ரூ.7,00,000/– த்திற்கு விக்கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினேன் என்றால் ரூ.4,00,000/– த்திற்கு தான் ஏற்பட்டது. கிரைய ஒப்பந்தத்தில் என்னுடைய வாரிசுகளும் கையெழுத்து போட்டார்கள் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட 2 நாட்கள் கழித்து சத்தியமூர்த்தி என்னிடம் பவர் பத்திரம் வாங்கினார் என்றால் சரியல்ல. அந்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் அவர் உதயகுமாருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.
2. சாட்சி பின்னர் மீண்டும் சத்தியமூர்த்தி உதயகுமாருக்கு கிரைய கொடுத்தது உண்மை என்று கூறுகிறார். சத்தியமூர்த்திக்கு எழுதி கொடுத்த பொது பவர் பத்திரத்தில் என்னுடைய மகன்கள் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. உதயகுமார் கிரைய பத்திரத்தின் அடிப்படையில் சொத்துகளை மனைகளாக பிரித்து விற்றுள்ளார் என்றால் சரியல்ல. சுமார் 38 நபர்களுக்கு அதை விற்றுள்ளது சரிதான். 15 செண்ட் நிலத்தை உதயகுமார் தான செட்டில்மெண்டாக அரசாங்கத்திற்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த 38 பெயரில் சுமார் 12 நபர்கள் வீடு கட்டியுள்ளார்கள்.
3. பஞ்சாயத்து மூலமாக குடிநீர் வினியோகம் வழங்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. 15 செண்ட் நிலத்தில் தற்போது இ சேவை மையம் இயங்கி வருகிறது என்றால் சரியல்ல. சொத்து பிரச்சனை சம்மந்தமாக நான் பல இடங்களில் புகார் கொடுத்து அதை திருப்பி

அனுப்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. சொத்து பிரச்சனை தொடர்பாக நான் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டபடும் உத்தரவு நகல் அது தான் என்றால் அது எனக்கு தெரியாது. சொத்தினை மனைகளாக பிரிப்பதற்கு பஞ்சாயத்து மூலமாக அனுமதி பெறபட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் என்னுடைய மகன் பஞ்சாயத்து போர்டு வார்டு உறுப்பினராக இருந்தார்.

4. 2ம் பிரதிவாதியின் மனைவிக்கும் என்னுடைய மகனுக்கும் இடையில் துணை தலைவர் பதவி தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்திற்கு எதிரில் தான் என் வீடு உள்ளது. பஞ்சாயத்தில் மனைகளுக்கு அனுமதி வாங்கிய போது நான் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. இன்றைய தேதியில் சொத்து என்னுடைய பெயரில் இல்லை. என்னுடைய சுவாதீனத்தை காட்டகூடிய வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை.

5. அடமானம் போட்டதற்கும் வட்டி கட்டியதற்கும் ரசீது எதுவும் இல்லை. மாதத்திற்கு ரூ.8000/- வட்டி கட்டியுள்ளேன். அவ்வாறு வட்டி கட்டிய விவரத்தை வழக்குரையிலும் முதல் விசாரணையிலும் கூறவில்லை. அது தொடர்பாக இன்றைய தேதிவரை வழக்கறிஞர் அறிவிப்பு அல்லது புகார் எதுவும் கொடுக்கவில்லை. இதே வழக்கில் தாக்கல் செய்த இடைகால உறுத்துக்கட்டளைக்கான மனு இந்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யபட்டது சரிதான். அதன்பின் தாக்கல் செய்த மற்றொரு மனுவும் தள்ளுபடி செய்யபட்டது.

6. பத்திரம் பதிவு செய்தது செல்லாது என கூறி சார் பதிவளார் அலுவலகத்தில் நான் கொடுத்த மனு தள்ளுபடி ஆனாது என்றால் சரியல்ல. அ.வ.எண். 16/2020 என்ற வழக்கை ரீனா என்மீது போட்டுள்ளார். அந்த வழக்கில் இடைநிலை மனுவில் எனக்கு எதிராக உத்தரவாகியுள்ளது என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டபடும் புகைப்படத்தில் உள்ள கட்டிடத்தை தான் நான் சத்தியமூர்த்திக்கு கொடுத்த சொத்தில் அரசாங்கம் கட்டியுள்ளது. நான் சத்தியமூர்த்திக்கு சட்டபடியாக சொத்தை உரிமை மாற்றம் செய்துள்ள காரணத்தால் 2ம் பிரதிவாதியின் கிரையம் சட்டபடி செல்லும் என்றால் சரியல்ல.
7. ரூ.7 லட்சத்திற்கு விக்கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்துவிட்டு தற்போது அதை மறுத்து ரூ4,00,000/- அடமானம் என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. விக்கிரைய ஒப்பந்தம் மற்றும் பவர் பத்திரம் ஆகியவற்றை என்னுடைய வாரிசுகள் கையெழுத்து போட்டுள்ளதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த காலத்திலும் அடமான பத்திரம் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மகன் கல்லுரி படிப்பு படித்துள்ளார். உண்மை தெரிந்து தான் அனைவரும் கையெழுத்து போட்டுவிட்டு தற்போது அதை மறுக்கிறோம் என்றால் சரியல்ல.
8. மனைகளாக பிரிக்கபட்டது ஆதிதிராவிட மக்களுக்கு மட்டும் ஒதுக்கபட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் போட்டுள்ள வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக பொய்யாக ஏற்படுத்தபட்டது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளிடம் அசல்

ஆவணங்களை கொடுத்தது உண்மையானது என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்க முடியாது என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 26/02/2024 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

Sd/B.ராஜா, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி
வாணியம்பாடி.